தகவல் ஏடு

# 1800MEDICARE செயலி

## 1800MEDICARE செயலி என்பது என்ன?

உங்களுடைய கைப்பேசி அல்லது மின்னணு சாதனத்தைப் பயன்படுத்தி 'My Health Record' (‘எனது சுகாதாரப் பதிவேடு’) தகவல்களை அணுகிப் பெறும், தரவிறக்கம் செய்யும், இருப்பில் வைக்கும் மற்றும் பகிர்ந்துகொள்ளும் வசதியை **1800MEDICARE** செயலி உங்களுக்கு அளிக்கிறது. **1800MEDICARE**செயலியைப் பயன்படுத்த உங்களுக்கு இணைய இணைப்பு ஒன்று தேவைப்படும்.

## இந்த 1800MEDICARE செயலியின் பயன்கள் யாவை?

- பாதுகாப்பாக அணுகவும், ‘My Health Record’-ஐப் பார்வையிடவும் **1800MEDICARE** செயலியை நீங்கள் பயன்படுத்தலாம்.
- **1800MEDICARE** -இன் முகப்புப் பக்கத்தில் காணப்படும் ‘தலைப்புத் துண்டு’(tile)கள் விரைவாகவும், எளிதாகவும் தகவல்களைக் கண்டறிய உங்களுக்கு உதவும்.
- **1800MEDICARE** மருத்துவ வரலாற்றுக் காலக்கோடு உங்களுடைய மருத்துவ வரலாற்றினை விரைவாகவும், எளிதாகவும் அணுகும் வசதியை உங்களுக்கு அளிக்கிறது.
- வருடம் மற்றும் பிரிவு ஆகியவற்றைக் கொண்டு தகவல்களை நீங்கள் வடிகட்டலாம்.
- உங்களுக்கு இணைய வசதி உள்ள இடங்களில் உலகளாவிய வகையில் **1800MEDICARE** செயலி இயங்கும்.

## ‘My Health Record’-இன் அனைத்து அம்சங்களும் இந்த செயலியில் கிடைக்குமா?

சில அம்சங்கள் ஒரே மாதிரியானவை. ‘My Health Record’ (‘myGov’ வழியாக) மற்றும் **1800MEDICARE** ஆகிய இரண்டிலும் முக்கியமான சுகாதாரத் தகவல்களை நீங்கள் பார்வையிடலாம். மருத்துவ ஆவணங்கள், ‘மெடிகெயர்’ ஆவணங்கள் மற்றும் நீங்கள் சேர்த்துள்ள முக்கியமான தகவல்கள் ஆகியன இதில் உள்ளடங்கும். யாரேனும் ஒருவருக்காக நியமிக்கப்பட்டுள்ள அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ள பிரதிநிதியாக நீங்கள் இருந்தால், அவருடைய பதிவையும் நீங்கள் பார்வையிடலாம்.

இருப்பினும், **1800MEDICARE**-ஐப் பயன்படுத்தி தகவல்களைச் சேர்க்கவோ, சில பதிவுச் செயல்பாட்டு முறைகளை நிர்வகிக்கவோ தற்சமயம் உங்களால் இயலாது. தகவல்களைச் சேர்க்க அல்லது உங்களுடைய பதிவுச் செயல்பாட்டு முறைகளை நிர்வகிக்க, ‘மை-கவ்’ (myGov) மூலமாக ‘My Health Record’-ஐ நீங்கள் பயன்படுத்த வேண்டும்.

## இந்த செயலியில் உள்ள பாதுகாப்பு அம்சங்கள் யாவை?

**1800MEDICARE** என்பது பாதுகாப்பானது மற்றும் பத்திரமானது. உங்களுடைய சாதனத்திலுள்ள பாதுகாப்பு அம்சத்திற்கு மேலாக, பாதுகாப்பானதொரு 6-இலக்க ‘அடையாளக் குறியீட்டு எண்’(PIN)ணை நீங்கள் ஏற்படுத்திக்கொள்ளலாம். மற்றவர்களுடன் உங்களுடைய சாதனத்தைப் பகிர்ந்துகொள்வதற்கு முன்பாக, உங்களுடைய செயலியை விட்டு நீங்கள் வெளியேற வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்களுடைய தகவல்களின் அந்தரங்கத் தன்மை மற்றும் பாதுகாப்பினைக் காக்க இது உதவும்.

**1800MEDICARE**- செயலியின் பாதுகாப்பைப் பற்றிய கரிசனம் ஏதும் உங்களுக்கு இருந்தால், உங்களுடைய ‘அடையாளக் குறியீட்டு எண்’(PIN)ணை நீங்கள் நீங்கள் உடனடியாக மாற்றிவிட வேண்டும். இந்த செயலியின் ‘கணக்குப் பக்க’(account page)த்தில் உங்களுடைய ‘சொந்த அடையாள இலக்க’(PIN)த்தினை நீங்கள் மாற்றிக்கொள்ளலாம். 5 நிமிடத்திற்கு இந்த செயலியை நீங்கள் பாவிக்கவில்லை என்றால், **1800MEDICARE** உங்களை இது வலைப்பக்கத்திலிருந்து வெளியேற்றிவிடும்.

## **1800MEDICARE** செயலியில் இருந்து நான் எவற்றைத் தரவிறக்கம் செய்து பகிர்ந்துகொள்ளலாம்?

’My Health Record’-இல் இருந்து உங்களுடைய கைப்பேசிக்கு உங்களுடைய ஆவணங்களைத் தரவிறக்கம் செய்ய **1800MEDICARE** செயலி உங்களை அனுமதிக்கும். தடுப்பூசி சான்று ஆவணங்கள், மற்றும் இரத்த சோதனை முடிவுகள் போன்ற மருத்துவ ஆவணங்களை நீங்கள் தரவிறக்கம் செய்யலாம். இவற்றை நீங்கள் உங்களுடைய தொலைபேசியில் சேமித்து வைத்துக்கொள்ளலாம். மற்ற ஆட்கள் அல்லது அமைப்புகளுடன் நீங்கள் ஆவணங்களைப் பகிர்ந்துகொள்ளவும் **1800MEDICARE** உங்களை அனுமதிக்கும். பகிர்ந்துகொள்வதற்காக இந்த செயலியை நீங்கள் பயன்படுத்தும் ஒவ்வொரு முறையும் ‘சடுதித் தோற்ற அறிவிப்பு’ (pop-up notification) ஒன்றை நீங்கள் பெறுவீர்கள். உங்களுடைய தகவல்களைப் பகிர்ந்துகொள்ளும் பொழுது நீங்கள் அவதானமாக இருக்கவேண்டும் என்பதை இது உங்களுக்கு நினைவூட்டும்.

## **1800MEDICARE** செயலியை நான் எங்கே பெறலாம்?

‘கூகுள் ப்ளே’ (Google Play) (‘ஆன்ட்ராய்ட்’ சாதனங்களுக்கு), அல்லது ‘ஆப்-ஸ்டோர்’ (App Store) (‘ஆப்பிள்’ சாதனங்களுக்கு) ஆகியவற்றில் 1800MEDICARE-க்கான தேடல்களை மேற்கொண்டு இந்த செயலிய நீங்கள் தரவிறக்கம் செய்யலாம். இச் செயலியைத் தரவிறக்கம் செய்ய இந்த ‘க்யூ-ஆர் குறியீ’(QR code)ட்டினை ‘ஸ்கேன்’ செய்யுங்கள்.

## கூடுதல் மூலவளங்கள் மற்றும் ஆதரவுதவி

**1800MEDICARE** வலைத்தளம் :
https://www.digitalhealth.gov.au/1800MEDICAREapp

1800MEDICARE இணையவழிக் கல்வி:
https://training.digitalhealth.gov.au/mod/page/view.php?id=1035

‘My Health Record’ உதவித் தொலைபேசி இணைப்பு
Ph: 1800 723 471 (தெரிவு 1), நாளுக்கு 24 மணி நேரமும் வாரம் 7 நாட்களும் கிடைக்கும்.

‘ஆஸ்திரேலிய டிஜிட்டல் ஹெல்த் ஏஜென்சி’ தொடர்புப் படிவம்:
www.digitalhealth.gov.au/contact-us

‘மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்பு சேவை
Ph:131 450
Web: www.tisnational.gov.au/Help-using-TIS-National-services/Contact-TIS-National

‘நேஷனல் ரிலே சர்வீஸ்’
தொலைபேசி: 1300 555 727
Web: www.accesshub.gov.au